சிசி 64/2022
எ. சா. 1
பெயர் : ரோகிணி
10.02.2025

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. ம.சா.ஆ 1 கடனுறுதி சீட்டு, மசாஆ 2 காசோலை, எசாஆ 2 கடனுறுதிசீட்டு, எசாஆ 3 காசோலை, எசாஆ 9 கடனுறுதி சீட்டு, எசாஆ 10 காசோலை, எசாஆ 17 கடனுறுதி சீட்டு, எசாஆ 18 காசோலை ஆகிய ஆவணங்களில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் ஆமாம். கடனுறுதிசீட்டு ஆவணங்களில் எழுதியதும் சாட்சியுமாக என்ற இடத்தில் காமராஜ் என்று உள்ளது என்றால் ஆமாம். அவர் யார் என்று எனக்கு தெரியாது. மசாஆ 1 கடனுறுதிசீட்டில் முதலில் சாட்சியாக எனது கணவர் கோபாலகிருஷ்ணன் கையெழுத்து செய்துள்ளார் என்றால் ஆமாம். எசாஆ 2, எசாஆ 9, எசாஆ 17 கடனுறுதிசீட்டுகளில் உள்ள சாட்சி கையெழுத்து எனது கணவர் கோபாலகிருஷ்ணன் செய்துள்ளார் என்றால் ஆமாம்.

2. மசாஆ 1, எசாஆ 2 கடனுறுதிசீட்டுகளில் கண்ணபிரான் என்பவர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அவரை யார் என்று எனக்கு தெரியாது. எசாஆ 9 மற்றும் எசாஆ 17 கடனுறுதிசீட்டுகளில் பிரபாகரன் என்பவர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் ஆமாம். அவர் யார் என்று எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது ராமராஜ் என்பவர் என் மேல் போடப்பட்ட காசோலை வழக்குகளான சிசி 60/2022,61/2022 பணம் செலுத்தி விட்டதால் முடித்து வைக்கப்பட்டு என்னை வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டது என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான்.

3. மேற்சொன்ன ராமராஜ் அவர்களிடம் வாங்கிய கடன்களை போலவே புகார்தாரர் வரதராஜிடம் கடன் வாங்கி புரோ நோட்டுகள் எழுதி கொடுத்து மேற்படி கடன்களை திருப்பி செலுத்தும் விதமாக தாவா வழக்கு காசோலைகளை கொடுத்துள்ளீர்கள் என்றால் இல்லை. காமராஜ் எனது கணவருக்கும் எனது மாமனார் சுந்தரமூர்த்திக்கும் நன்கு பழக்கமானவர் என்றால் ஆமாம். ராமராஜிடம் கடன் பெற்றுவிட்டு புரோநோட் காமராஜை வைத்து எழுதிவிட்டு பின்பு எனது கணவரும் மாமனாரும் வரதராஜிடம் வாங்கிய கடனுக்கும் புரோ நோட் எழுதி கொடுக்கவேண்டும் என்று காமராஜிடம் சொன்னதின்பேரில் வரதராஜ் வாங்கிய கடனுக்கு புரோ நோட்டை காமராஜை வைத்து எழுதினீர்கள் என்றால் இல்லை.

4. ராமராஜின் புரோநோட்டில் தங்கள் கணவருடன் பிரபாகரன்

என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றும் தாவா வழக்கில் சம்மந்தப்பட்ட புரோநோட்டுகளில் எனது கணவர் கோபாலகிருஷ்ணனும் கண்ணபெருமாள் என்பவரும் கையெழுத்து செய்துள்ளதில் இருந்தே மேற்படி புரோ நோட்டுகள் வெவ்வேறு இடங்களில் வாங்கப்பட்ட கடனுக்காக எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை. எனது முதல் விசாரணையில் எனது கணவர் ராமராஜ் என்பவரிடன் 1 இலட்சம் கடன் வாங்கியதற்காக நான் காசோலைகளில்கையெழுதது செய்து ராமராஜிடம் 5 காசோலைகள் 5 புரோநோட்டுகளும் எனது கணவருக்கு சொந்தமான 5 காசோலைகள் 5 புரோநோட்டுகளும் எனது கணவர் கொடுத்ததாக சொல்வது சாதாரண மனிதனால்கூட நம்பும்படி இல்லை என்று சொன்னால் சரியல்ல.

5. எனக்கு வங்கி கணக்கு உள்ளது. நான் பல்மருத்துவராக இருப்பதால் வங்கி கணக்கு பண பரிவர்த்தனை செய்யும் வழிமுறைகள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். ஆகையால் கையெழுத்து செய்து காசோலை கொடுத்தால் வங்கியில் பணமாக்கமுடியும் என்று தெரிந்தே கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வரதராஜிடம் வாங்கிய கடனுக்காகதான தாவா காசோலைகள் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் ஆமாம். மேற்படி அறிவிப்பில் உண்மைத்தன்மை இருந்ததால்தான் நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல,

6. நான் இந்த நீதிமன்றத்தில் சிசி 354/2022, சிசி 357/2022, சிசி 358/2022, ஆகிய காசோலை மோசடி வழக்குகளில் எதிரியாக இருக்கிறீர்கள் என்றால் ஆமாம். புகார்தாரரை ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் போதுமான பணத்தை வங்கி கணக்கில் வைக்காமல் மோசடி செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தண்டிக்கப்படவேண்டிய நபர் என்றால் சரியல்ல.